# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.
# OS No. 209/2022

**04.11.2025 பி.வா.சா.1 செல்வராஜ் த/பெ. பாலகிருஷ்ணன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல்துரையில் பணிபுரிந்ததால் சட்டங்கள் பற்றி ஒரு அடிப்படை அறிவு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் மனைவி பெயரில் கிரையம் பெறுவதற்கு முன் வில்லங்கம் உள்ளதா என்று நான் பார்க்கவில்லை. தாவா சொத்து முதல் பிரதிவாதி முருகனுக்கு எப்படி கிடைத்தது என்று எனக்கு தெரியும். தாவா சொத்து 2 இன சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அவற்றில் ஒரு இன சொத்து அரசால் பட்டா வழங்கப்பட்ட இடம் என்றும், மற்றொரு சொத்து முருகனின் தந்தை கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து 2 இன சொத்துக்களையும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பின்னர் 01.06.2011 அன்று பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவு பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த பாகப்பத்திரத்தில் " நாம் அனைவரும் இந்து கூட்டு குடும்பத்தை சேர்ந்த உறுப்பினர்கள் " என்ற வாசகம் உள்ளது என்றால் நான் அதை பார்த்ததில்லை. அந்த பாகப்பிரிவு பத்திர்த்திலேயே 1ம் இன சொத்து முருகனின் தந்தை பெயரில் அரசால் பட்டா வழங்கப்பட்ட சொத்து என்று உள்ளது என்றால் சரிதான். 2ம் இன சொத்தை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பங்குகொண்டு குடும்பத்தில் மூத்த உறுப்பினர் என்ற வகையில் முருகனின் தந்தை பாண்டுரங்கன் பெயரில் கிரையம் பெற்றதாக ஆவணத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை படித்து பார்த்திருந்தால் அது கூட்டு குடும்ப சொத்து என்று தெரியவரும் என்றால் சரியல்ல. அது பாண்டுரங்கனின் கிரைய சொத்தாகும். அந்த பாகப்பத்திரத்தின் மூலம்தான் முருகனுக்கு பாகம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். முருகனுக்கு ஜான்சிராணி, சுந்தரபாண்டியன் , சங்கீதா ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் வாதிகளுக்கு தலா 4ல் ஒரு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. முருகன் அவருடைய குடும்பத்துடன் சேர்ந்து இல்லை என்றால் சரியல்ல. குடும்பத்துடன்தான் இருக்கிறார். முருகன் தன் குடும்பத்்துடன் இருந்திருந்தால் வாதியுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. முருகனுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் இல்லை. நான் காவல்துரையில் பணிபுரிந்தபோது முருகனும் அவர் மனைவி ராஜேஸ்வரியும் ஒருவர் மீது ஒருவர் புகார் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். முருகனுக்கும்

அவர் மனைவி ராஜேஸ்வரிக்கும் அடிக்கடி தகராறு செய்துகொண்ட காரணத்தால்தான் புகார் கொடுத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் அசலை என்னிடம் யார் கொடுத்தார்கள் என்றால் முருகனும் அவருடைய தந்தையும் கொடுத்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.6 வரை உள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் ரூ. 9,14,000/- க்கு கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் உள்ள வாசகங்கள் எல்லாம் சரிதான். கிரையத்திரம் ஏற்பட்ட தேதியில் அடமானம் நிலுவையில் இருப்பதாக மட்டும் உள்ளது என்றால் அடமான கடனும் செங்கல் சூளைக்காக வாங்கிய கடனும் நிலுவையில் இருப்பதாக உள்ளது. அந்த பத்திரத்தில் ரூ. 1,66,000/- அடமான கடன் இருப்பதாக மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். கிரையம் ஏற்பட்ட தேதியில் அடமான கடன் தவிர வேறு கடன் எதுவும் நிலுவையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ. 1,66,000/- மட்டுமே கொடுத்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதற்குமேல் நான் கொடுத்த பணத்திற்கு வரவு ரசீது நான் வைத்துள்ளேன். தாவா சொத்தின் மதிப்பு ரூ. 9,14,000/- என்றும் நாங்கள் முருகனின் குடிப்பழக்கத்தை சாதகமாக எடுத்துக்கொண்டு ரூ. 1,66,140/-ற்கு கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.8 போலிஸ் சம்மனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் இல்லை. பி.வா.சா.17 வரிசையில் உள்ள 4 கடனுறுதி சீட்டுகளை எனக்கு முருகன் மற்றும் பாண்டுரங்கன் கொடுத்தார்கள். வெற்று கடனுறுதி சீட்டு வாங்குவது தவறு என்று தெரியுமா என்றால் பணம் வாங்கியதற்கு அவர்களாகவே எழுதிக்கொடுத்தார்கள். முருகனின் கெட்டப்பழக்கங்களை பயன்படுத்திக்கொண்டு நான் அவரிடம் கடன் உறுதி சீட்டுகளை எழுதி வாங்கவந்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.19 இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முருகனின் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளை தெரிந்துகொண்டு பி.வா.சா.ஆ.19 வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலம் பத்தி 6ல் உள்ள அம்சங்கள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்பத்தில் இருந்தால் நான் அவற்றை முழுமையாக வாங்கியது தவறு என்றும் வாதிகளுக்கு அதில் 4ல் 3 பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தவறான முறையில் சொத்தை வாங்கிய காரணத்தால் அதன் மீது நான் எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கோரிய

பரிகாரத்திற்கு வாதிகள் உரியவர் என்றால் சரியல்ல. தவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.